**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை**

**வவுனியா மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 02 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 21 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்ரெம்பா 13 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடையும் ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3. நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

அ) சபையின் சொத்துக்களின் ஆரம்பமீதியில் உள்ள சொத்துக்கள் பௌதிகரீதியாக இல்லாத போதும் வருட இறுதியில் சொத்துக்களின் பெறுமதியினுள் உள்ளடக்கப்பட்டமையால் 31/12/2016 உள்ள சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,794,951 ஆல் அதிகரித்துக்காட்டப்பட்டுள்ளது.

ஆ) சபையினால் மீளாய்வாண்டில் 31.12.2016 காலப்பகுதிக்குள் மூலதன வேலைகள் முடிவுறுத்தப்படாமையினால் செலவு கடன்வழங்குனர் ரூபா 11,079,181 ஆல் அதிகரித்து காட்டப்பட்டுள்ளமையால் நடைமுறைப்பொறுப்பும் அதிகரித்து காட்டப்பட்டுள்ளது.

#### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ)** 1988ம் ஆண்டு சபைக்கு வழங்கப்பட்ட ஆயுள்வேத நன்கொடை 38,280 இதுவரை பெறப்பட்டிருக்காததுடன் நீண்டகாலமாக அரசிறை நிலுவையாக காட்டப்பட்டுவருகிறது.

**(ஆ)** முற்பணக்கணக்கில் நீண்ட காலமாக உள்ள ரூபா 22,277 நிதிப்பிரமாணம் 371(5) இற்கிணங்க தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

#### 1.3.3 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை

சட்டங்கள் விதிகள் பிரமானங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாக விதிக்கோவை | |
| விதி இல. 217 | சபையினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற சகல காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| நிதிப்பிரமாணம் 571 | காலங்கடந்த வைப்புக்கள் ரூபா 3,714,080 நீண்ட காலமாக உள்ள போதும் நிதிப்பிரமாணம் 571 இன் படி நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. |
| (இ) 1990 ஒக்டோபர் 10ந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 41/90, 02-1ஆம் பந்தி | ஒவ்வொரு 06 மாதங்களுக்கு ஒருமுறை எரிபொருளினால் தாங்கியை பூரணமாக நிரப்பி ஓட்டத்தில் ஈடுபடுத்தி எரிபொருள் நுகர்வினை பரீட்சிக்க வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின்படி மீளாய்வு ஆண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் தேறிய மிகையாக ரூபா 7,691,403 ஆக விளைந்திருப்பதுடன் ஒப்பிடும்போது நேரொப்பான முன்னைய ஆண்டின் செயற்பாட்டின்தேறிய மிகையாக ரூபா 1,144,911 ஆகவும் விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 6,546,492 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

பாதீட்டு மதப்பீடானது சரியான முறையில் தயாரிக்காமலும் மதீப்பீட்டை சரியான முறையில் திட்டமிட்டு நிகழ்ச்சிப்படுத்தாமைலேயுமே பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே வேறுபாடு 5,084,142 ஏற்பட்டமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது

#### 2.2.2 ஆதனவரி

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆதனங்களுக்கு ஆதன மீள் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு ஆதனவரி வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 ஏனைய வருமானம்**

சபைக்கு சொந்தமான ஜெசிபி, மோட்ட கிரேடர் என்பவற்றின் மூலம் சபைக்கு வருமதியான ரூபா 296,738 அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்**

**அ) நீதிமன்ற தண்டப்பணம்**

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் வவுனியா நீதி மன்றத்தினால் 2016 டிசம்பர் 31 வரை சபைக்குக் கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 2,932,360 பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் உள்ளது.

**ஆ) முத்திரைக் கட்டணங்கள்**

2001 தொடக்கம் 2016 வரை சபையினால் பெறப்பட வேண்டிய முத்திரை தீர்வை ரூபா 18,387,230 காணிப் பதிவாளரிடம் இருந்து பெற நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.2.5** மீளாய்வாண்டில் CBG திட்டத்தின் கீழ் சபையினால் மேற்கொள்ளப்பட்ட ஓமந்தை அரச உத்தியோகத்தர் வீட்டுத்திட்டம் 2ம் ஒழுங்கை கிரவலிடல் வேலையானது ரூபா 100,000 மதிப்பீடு செய்யப்பட்டு கிராம அபிவிருத்திச் சங்கம் அரச உத்தியோகத்தர்கள் வீடமைப்பு திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டு கொடுப்பனவாக அளவுச்சிட்டையின் படி ரூபா 82,984 செலுத்தப்பட வேண்டியிருந்தும் இறுதிக் கொடுப்பனவாக ரூபா 99,372 செலுத்தப்பட்டமையால் மேலதிக கொடுப்பனவாக ரூபா 16,388 செலுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

**2.3 முகாமைத்துவ செயற்திறனின்மை**

**(அ)** 2006ம் ஆண்டு உள்ளுராட்சி ஆணையாளரால் வழங்கப்பட்ட ரூபா 262,500 பெறுமதியுடைய 02 போட்டோ பிரதி இயந்திரம் இதுவரைபாவனையில் ஈடுபடுத்தப்படாமல் இருப்பதுடன் இதுதொடர்பாக உரிய நடைமுறையை பின்பற்றி பாவனையில் ஈடுபடுத்துவதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கோ இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**(ஆ)** சபையில் காணப்படும் 23 வாகனங்களின் உரிமையானது சபைக்கு உரியதாக இல்லாத போதும் அதன் உரிமை மாற்றம் தொடர்பாக இவ்வறிக்கைத் திகதிவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

**2.4 சொத்து முகாமைத்துவம்**

**(i)** சபையின் 02 வாகனங்கள் நீண்டகாலமாக பாவனையில் ஈடுபடுத்தப்படாமல் இருப்பதுடன் இது தொடர்பாக உரிய நடைமுறையை பின்பற்றி பாவனையில் ஈடுபடுத்துவதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கோ இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**(ii)** மீளாய்வாண்டில் சபையினால் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டத்தின்கீழ் தோணிக்கல் வாராந்த சந்தை நிர்மாண வேலைக்கான கிசாலன் நிர்மாணத்தினரால் ரூபா 814,719 செலவில் 18.11.2015ல் பூர்த்தி செய்யப்பட்டிருந்தும் இவறிக்கைத்திகதி வரை பாவணையிலீடுபடுத்தப்படாமல் உள்ளது.

3. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கீழ்க் குறிப்பிடப்படும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பான விடயங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

**(i)** வருமான சேகரிப்பு.

**(ii)** நிலையான சொத்துக்கள்

**(iii)** முற்பணப் பெறுகைகள்

**(iv)** முற்பணக் கொடுப்பனவுகள்

**(v)** மூலதன வேலைகள்

**(vi)** பிரதான பேரேட்டுப் பராமரிப்பு